**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : S.T.C. No. 509/2024**
**Prosecution Witness : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாபு | | : |
| Father / Husband Name | : ராமமூர்த்தி | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused Present.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of **04/04/2025**

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

**1**) நான் கடந்த 2 வருடங்களாக துளசி நெல் மண்டி வைத்து நடத்தி வருகிறேன். அதற்கு முன்னர் நெல் வியாபாரம் செய்து வந்தேன். நான் நெல் மண்டியில், என்னிடம் நெல் கொண்டு வரும் நபர்களிடம் நெல்லை பணம் கொடுத்து பெற்று பின்னர் அதை விற்பதனால், கமிஷன் வரும் என்றால் சரிதான். மேற்படி நெல் மண்டிக்கு ஜிஎஸ்டி பதிவெண் வாங்கியுள்ளேன். ஜிஎஸ்டி பதிவெண் பெற்றாலே, மாதம் மாதம் செய்யப்படும் பரிவர்த்தனைகள் குறித்து ஜிஎஸ்டி ரசீது சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். எனது வழக்குபடி துளசி நெல் மண்டியில் எதிரி அரிசி வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் எதிரிக்கு நெல், அரிசி கொடுத்ததற்கான ரசீதுகளோ, வேறு ஏதும் ஆவணங்களோ அல்லது ஜிஎஸ்டி ரசீது சமர்ப்பித்ததாக எந்த ஆவணங்களும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிரி கொடுத்த காசோலையை தாக்கல் செய்துள்ளேன். என் வழக்குபடி எதிரி எனக்கு இறுதியாக கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு என்றால், ரூ.2 லட்சத்து 62 ஆயிரம் ஆகும். எதிரி கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைக்கு பகுதி தொகைக்கு காசோலை கொடுத்தார் என்ற விவரத்தை நான் வழக்கில்

B IYAPPAN Digitally signed by B IYAPPAN

வழக்கறிஞர் அறிவிப்பிலோ, சத்திய பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரி எனக்கு 5 காசோலைகள் கொடுத்ததாக சொல்லப்படும் விவரத்தை வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி தர வேண்டிய பாக்கித் தொகையில் பகுதி தொகைக்கு காசோலை கொடுத்தது போக, மீதித் தொகை குறித்து ரசீதோ, வேறு எதும் மேலெழுத்து செய்த ஆவணங்களோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யவில்லை. பாக்கித் தொகை குறித்து வழக்கிலும் சொல்லவில்லை.

3) வழக்கு தாக்கல் செய்யும் முன்பு நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு எதிரி வழக்கறிஞர் மூலம் 11.11.2023ம் தேதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை மறுத்து எந்தவித அறிவிப்பும் நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலையை இரண்டு முறை வங்கியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்குபடி 11.10.2023ம் தேதி வழக்கு காசோலையை முதல் முறை வங்கியில் தாக்கல் செய்த பிறகு பின்னிட்டு 5 நாட்கள் கழித்து 17.10.2023ம் தேதி காசோலை எண்.030031 என்ற காசோலையில் ரூ.35,000/-த்திற்கு தாக்கல் செய்து பணமாக்கினேன் என்றால் சரிதான்.

4) அதன்பிறகு 13.12.2023ம் தேதி வழக்கு காசோலையை இரண்டாவது முறை வங்கியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பணமாக்கப்பட்ட காசோலை தொகை குறித்தோ, மேற்படி தொகையை கழித்தது குறித்தோ வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான். எதிரி செங்குன்றம் பகுதியில் என்னைப் போன்று பல்வேறு மண்டிதாரர்களிடம் நெல் கமிஷன் ஏஜெண்டாக செயல்பட்டு வருகிறார் என்றால் சரிதான். பொதுவாக, கமிஷன் ஏஜெண்டுகளிடம் நெல் மண்டிதாரர்கள் காசோலை பெற்றுக் கொள்வார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், நான் பல்வேறு கடைக்காரர்களுக்கு அரிசி சப்ளை செய்துவிட்டு, கொரனோ காலக்கட்டத்தில் அவர்கள் சரியாக பாக்கியை தராத காரணத்தினால், எதிரி பொறுப்புறுதிக்கு கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

B IYAPPAN Digitally signed by B IYAPPAN

5) நான் இந்த வழக்கில் எதிரி கொடுத்த வேறு 5 காசோலைகள் குறித்து நான் சொல்லவில்லை. எதிரி எந்தெந்த தேதியில் எவ்வளவு அரிசி மூட்டைகள் வாங்கினார் என்றோ, எத்தனை மூட்டைகள் எவ்வளவு பணத்திற்கு வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அரிசி வாங்கியதாக சொல்லப்படும் மொத்த தொகை, பகுதி தொகைக்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரியால் 19.12.2023ம் தேதியிட்டு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் நான் அனுப்பவில்லை என்றால், சரியல்ல.

6) நானும் சுரேஷ் என்பவரும் ஒரு சமயத்தில் கூட்டாண்மையின் அடிப்படையில் தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். தொழில்முறையில் ரத்தீஸ்ராஜ், சுரேஷ்பாபு ஆகியோர் எனக்கு தெரிந்த நபர்கள் ஆவார்கள். நான் இவ்வழக்கில் ஜிஎஸ்டி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால், எதிரி பொறுப்புறுதிக்கு கொடுத்த காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு அரிசி கொடுத்தேன் என்று ரசீது தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. எதிரி எனக்கு எந்தவித சட்டப்பூர்வ கடனுக்குட்பட்டு தொகை எதுவும் கொடுக்க வேண்டியதில்லை என்றாலும், அதை நிரூபிக்க வேண்டிய கடமை என்னுடையதாக இருந்தும், நான் அதை நிரூபிக்கவில்லை என்றாலும், நான் வேறு யாருக்கோ கொடுக்க வேண்டிய தொகைக்கு எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில், மற்ற 4 நபருடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) நான் பெரிய அளவில் வியாபாரம் செய்து வருவதால், ரசீதுகள், ஆவணங்கள் இல்லாமல், பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் பராமரித்து வரும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

B IYAPPAN Digitally signed by B IYAPPAN